**யோசேப்பு : கிறிஸ்துவின் நிழல்**
Thursday Bible Study
ACA Avadi Church
11 April 2024

**சங்கீதம் 119:18**
உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்.

**பழைய ஏற்பாட்டில் இயேசு மறைக்கப்பட்டுள்ளார். புதிய ஏற்பாட்டில் இயேசு வெளிப்படுகிறார்**
- தேவன் தனது மீட்பின் திட்டத்தை பழைய ஏற்பாட்டில் முன்னமே ஏற்படுத்தப்பட்டுள்ள சத்தியத்தின் மூலம் நமக்கு கற்பித்தார்.
- வருகிற காரியங்களுக்கு நிழலாட்டமாக தேவன் பழைய ஏற்பாட்டில் மனிதர்கள், சம்பவங்கள், ஏற்படுத்தப்பட்ட சம்பிரதாயங்கள், (கட்டமைப்பு) வாயிலாக தேவன் தமது மீட்பின் திட்டத்தை நமக்கு கற்பித்தார்

**நான்கு வகையான முன்னடையாளங்கள்**
- **I. முன்னடையாளமான நபர்கள்:**
- **II. முன்னடையாளமான சம்பவங்கள்:**
- **III. முன்னடையாளமான செயல்கள்:**
- **IV. முன்னடையாளமான நிறுவனங்கள்**

**யோசேப்புவுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையே உள்ள 40 ஒற்றுமைகள்:**

**1. இருவரும் மேய்ப்பர்களின் வாழ்க்கையை நன்கு அறிந்தவர்கள். (பரீட்சையமானவர்கள்)**
**ஆதியாகமம் 37:2**
யோசேப்பு பதினேழு வயதிலே தன் சகோதரருடனே **ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தான்**;
**யோவான் 10:11**
**நானே நல்ல மேய்ப்பன்**: நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்.

**2. இருவரும் தங்கள் தகப்பனால் அன்பு கூறப்பட்டார்கள்.**
**ஆதியாகமம் 37:3**
இஸ்ரவேலின் முதிர்வயதிலே யோசேப்புத் தனக்குப் பிறந்ததினால், இஸ்ரவேல் தன் குமாரர் எல்லாரிலும் அவனை **அதிகமாய் நேசித்து**, அவனுக்குப் பலவருணமான அங்கியைச் செய்வித்தான்.
**யோவான் 17:24**
பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் **அன்பாயிருந்தபடியினால்**, நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்.

### 3. இருவரும் அவர்களுடைய சகோதரர்களால் பகைக்கப்பட்டார்கள்.

**ஆதியாகமம் 37:8**

அப்பொழுது அவன் சகோதரர் அவனைப் பார்த்து: நீ எங்கள்மேல் துரைத்தனம் பண்ணுவாயோ? நீ எங்களை ஆளப்போகிறாயோ? என்று சொல்லி, அவனை அவன் சொப்பனங்களின் நிமித்தமும், அவன் வார்த்தைகளின் நிமித்தமும் இன்னும் **அதிகமாய்ப் பகைத்தார்கள்**.

**யோவான் 15:25**

25. முகாந்தரமில்லாமல் **என்னைப் பகைத்தார்கள்** என்று அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும்படிக்கு இப்படியாயிற்று.

### 4. இருவர்களுடைய சகோதரர்கள் அவர்களை நம்பவில்லை.

**ஆதியாகமம் 37:20**

நாம் அவனைக் கொன்று, இந்தக் குழிகள் ஒன்றிலே அவனைப் போட்டு, ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்தது என்று சொல்லுவோம் வாருங்கள்; அவனுடைய **சொப்பனங்கள் எப்படி முடியும் பார்ப்போம்** என்றார்கள்.

**யோவான் 7:5**

அவருடைய சகோதரரும் அவரை **விசுவாசியாதபடியால்** இப்படிச் சொன்னார்கள்.

### 5. இருவர்களுடைய ஆளுகை / அதிகாரம் நிராகரிக்கப்பட்டது.

**ஆதியாகமம் 37:8**

அப்பொழுது அவன் சகோதரர் அவனைப் பார்த்து: நீ எங்கள்மேல் துரைத்தனம் பண்ணுவாயோ? நீ எங்களை ஆளப்போகிறாயோ? என்று சொல்லி, அவனை அவன் சொப்பனங்களின் நிமித்தமும், அவன் வார்த்தைகளின் நிமித்தமும் இன்னும் அதிகமாய்ப் பகைத்தார்கள்.

**மாற்கு 8:31**

அல்லாமலும், மனுஷகுமாரன் பலபாடுகள் பட்டு, மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்பட்டு, கொல்லப்பட்டு, மூன்று நாளைக்குப்பின்பு உயிர்த்தெழுந்திருக்கவேண்டியதென்று அவர்களுக்குப் போதிக்கத்தொடங்கினார்.

### 6. இருவரும் அவர்கள் சகோதரர்களால் பொறாமை கொள்ளப்பட்டார்கள்

**ஆதியாகமம் 37:11**

அவன் சகோதரர் அவன்மேல் **பொறாமைகொண்டார்கள்**; அவன் தகப்பனோ அவன் சொன்னதை மனதிலே வைத்துக்கொண்டான்.

**மத்தேயு 27:17-18**

**பொறாமையினாலே** அவரை ஒப்புக்கொடுத்தார்கள் என்று பிலாத்து அறிந்து, 18. அவர்கள் கூடியிருக்கையில், அவர்களை நோக்கி: எவனை நான் உங்களுக்கு விடுதலையாக்கவேண்டுமென்றிருக்கிறீர்கள்? பரபாசையோ? கிறிஸ்து என்னப்படுகிற இயேசுவையோ? என்று கேட்டான்.

**7. இருவரும் சொன்னவைகள் தங்கள் பெற்றோர்களால் மனதில் வைக்கப்பட்டது (உற்று நோக்கப்பட்டது).**

**ஆதியாகமம் 37:11**

11. அவன் சகோதரர் அவன்மேல் பொறாமைகொண்டார்கள்; அவன் தகப்பனோ அவன் சொன்னதை **மனதிலே வைத்துக்கொண்டான்**.

**லூக்கா 2:51**

51. பின்பு, அவர் அவர்களுடனே கூடப்போய், நாசரேத்தூரில் சேர்ந்து, அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார். அவருடைய தாயார் இந்தச் சங்கதிகளையெல்லாம் தன் **இருதயத்திலே வைத்துக்கொண்டாள்**.

**8. இருவரும் தங்கள் சகோதரர்களிடம் அனுப்பப்பட்டார்கள்.**

**ஆதியாகமம் 37:13**

13. அப்பொழுது இஸ்ரவேல் யோசேப்பை நோக்கி: உன் சகோதரர் சீகேமிலே ஆடுகளை மேய்க்கிறார்கள் அல்லவா? உன்னை அவர்களிடத்துக்கு **அனுப்பப்போகிறேன்**, வா என்றான். அவன்: இதோ, போகிறேன் என்றான்.

**மத்தேயு 15:24**

24. அதற்கு அவர்: காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு **அனுப்பப்பட்டேனேயன்றி**, மற்றப்படியல்ல என்றார்.

**9. இருவரும் தங்கள் சகோதரர்களிடத்தில் வந்தார்கள்.**

**ஆதியாகமம் 37:14**

14. அப்பொழுது அவன்: நீ போய், உன் சகோதரருடைய க்ஷேமம் எப்படி என்றும், ஆடுகள் எப்படி இருக்கிறது என்றும் பார்த்து, எனக்கு மறுசெய்தி கொண்டுவா என்று அவனுக்குச் சொல்லி, எபிரோன் பள்ளத்தாக்கிலே இருந்து அவனை அனுப்பினான்; அந்தப்படியே **அவன் சீகேமுக்குப் போனான்**.

**யோவான் 1:11**

11. அவர் தமக்குச் சொந்தமானதிலே **வந்தார்**, அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

**10. இருவர்களுடைய சகோதரர்கள் அவர்களுக்கு விரோதமாக சதி ஆலோசனை செய்தார்கள்.**

**ஆதியாகமம் 37:18**

18. அவர்கள் அவனைத் தூரத்தில் வரக்கண்டு, அவன் தங்களுக்குச் சமீபமாய் வருமுன்னே, அவனைக் கொலைசெய்யும்படி **சதியோசனைபண்ணி,**

**மத்தேயு 26:16**

16. அதுமுதல் அவன் அவரைக் காட்டிக்கொடுப்பதற்குச் **சமயம் பார்த்துக்கொண்டிருந்தான்.**

**11. இருவர்களுடைய வஸ்திரங்கள் கழற்றப்பட்டது.**

**ஆதியாகமம் 37:23**

23. யோசேப்பு தன் சகோதரரிடத்தில் சேர்ந்தபோது, யோசேப்பு உடுத்திக்கொண்டிருந்த பலவருண **அங்கியை அவர்கள் கழற்றி**,

**மத்தேயு 27:28**

28. அவர் **வஸ்திரங்களைக் கழற்றி**, சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி,

**12. இருவரும் பாடுபடும் போது அவர்கள் பாடுகளைப் பார்க்கும்படியாக சகோதரர்கள் கூடவே அமர்ந்திருந்தனர்**

**ஆதியாகமம் 37:25**

25. பின்பு, அவர்கள் போஜனஞ்செய்யும்படி **உட்கார்ந்தார்கள்**; அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுக்கும்போது, இதோ, கீலேயாத்திலிருந்து வருகிற இஸ்மவேலருடைய கூட்டத்தைக் கண்டார்கள்; அவர்கள் எகிப்துக்குக் கொண்டுபோகும்படி கந்தவர்க்கங்களையும் பிசின்தைலத்தையும் வெள்ளைப்போளத்தையும் ஒட்டகங்கள்மேல் ஏற்றிக்கொண்டு வந்தார்கள்.

**மத்தேயு 27:36**

36. அவர்கள் அங்கே **உட்கார்ந்து**, அவரைக் காவல்காத்துக்கொண்டிருந்தார்கள்.

**13. இருவரும் பணத்திற்காக விற்கப்பட்டார்கள்.**

**ஆதியாகமம் 37:28**

28. அந்த வர்த்தகரான மீதியானியர் கடந்துபோகிறபோது, அவர்கள் யோசேப்பை அந்தக் குழியிலிருந்து தூக்கியெடுத்து, அவனை இஸ்மவேலர் கையில் **இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டார்கள்**. அவர்கள் யோசேப்பை எகிப்திற்குக் கொண்டுபோனார்கள்.

**மத்தேயு 26:15**

15. நான் அவரை உங்களுக்குக் காட்டிக்கொடுக்கிறேன், நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள் என்றான். அவர்கள் அவனுக்கு **முப்பது வெள்ளிக்காசைக்** கொடுக்க உடன்பட்டார்கள்.

**14. இருவரும் இக்கட்டான சூழ்நிலையில் எகிப்துக்கு கொண்டு செல்லப்பட்டார்கள்.**

**ஆதியாகமம் 37:36**

36. அந்த மீதியானியர் யோசேப்பை **எகிப்திலே** பார்வோனின் பிரதானியும் தலையாரிகளுக்கு அதிபதியுமாகிய போத்திபார் என்பவனிடத்தில் விற்றார்கள்.

**மத்தேயு 2:14-15**

14. அவன் எழுந்து, இரவிலே பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு, **எகிப்துக்குப்**
புறப்பட்டுப் போய், 15. ஏரோதின் மரணபரியந்தம் அங்கே இருந்தான். எகிப்திலிருந்து
என்னுடைய குமாரனை வரவழைத்தேன் என்று, தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தரால்
உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது

**15. இருவரோடும் கர்த்தர் கூட இருந்தார்.**

**ஆதியாகமம் 39:2**

2. **கர்த்தர் யோசேப்போடே இருந்தார்**, அவன் காரியசித்தியுள்ளவனானான்; அவன் எகிப்தியனாகிய தன் எஜமானுடைய வீட்டிலே இருந்தான்.

**யோவான் 16:32**

**32**. இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும்; அது இப்பொழுது வந்திருக்கிறது; ஆனாலும் நான் தனித்திரேன், **பிதா என்னுடனேகூட இருக்கிறார்**.

**16. இருவரும் நம்பிக்கைகுறியவர்களாய் (உண்மையுள்ளவர்களாய்) இருந்தார்கள்.**

**ஆதியாகமம் 39:4**

4. யோசேப்பினிடத்தில் தயவுவைத்து, அவனைத் தனக்கு ஊழியக்காரனும் தன் வீட்டுக்கு விசாரணைக்காரனுமாக்கி, தனக்கு உண்டான யாவற்றையும் அவன் கையில் **ஒப்புவித்தான்.**

**யோவான் 3:35**

35. பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து எல்லாவற்றையும் அவர் கையில் **ஒப்புக்கொடுத்திருக்கிறார்**.

**17. இருவர்களுடைய நிமித்தம் மனிதர்கள் ஆசிர்வதிக்கப்பட்டார்கள்.**

**ஆதியாகமம் 39:5**

5. அவனைத் தன் வீட்டுக்கும் தனக்கு உண்டான எல்லாவற்றிற்கும் விசாரணைக்காரனாக்கினதுமுதற்கொண்டு, **கர்த்தர் யோசேப்பினிமித்தம்** அந்த எகிப்தியன் வீட்டை ஆசீர்வதித்தார்; வீட்டிலும் வெளியிலும் அவனுக்கு உண்டானவைகள் எல்லாவற்றிலும் **கர்த்தருடைய ஆசீர்வாதம் இருந்தது.**

**எபேசியர் 1:3**

3. நம்முடைய **கர்த்தராகிய** இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் **கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்**.

**18. இருவரும் மற்றவர்களிடத்தில் மனதுருக்கம் உடையவர்களாய் இருந்தார்கள்.**

**ஆதியாகமம் 40:7**

7. அப்பொழுது அவன் தன் எஜமானுடைய வீட்டில் தன்னோடே காவல்பண்ணப்பட்டிருந்த பார்வோனுடைய பிரதானிகளை நோக்கி: **உங்கள் முகங்கள் இன்று துக்கமாயிருக்கிறது என்ன என்று கேட்டான்**.

**மத்தேயு 9:36**

36. அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், **அவர்கள்மேல் மனதுருகி,**

**19. இருவரும் பணிவிடைக்காரரை போல் வேலை செய்தார்கள் (உழைத்தார்கள்)**

**ஆதியாகமம் 40:4**

4. தலையாரிகளின் அதிபதி அவர்களை விசாரிக்கும்படி யோசேப்பின் வசத்தில் ஒப்புவித்தான்; அவன் **அவர்களை விசாரித்துவந்தான்**; அவர்கள் அநேகநாள் காவலில் இருந்தார்கள்.

**லூக்கா 22:27**

27. பந்தியிருக்கிறவனோ, பணிவிடைசெய்கிறவனோ, எவன் பெரியவன்? பந்தியிருக்கிறவன் அல்லவா? அப்படியிருந்தும், நான் உங்கள் நடுவிலே **பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன்**.

### 20. இருவரும் தங்களை நினைவு கூறும் படி மனிதர்களிடத்தில் கேட்டார்கள்.

**ஆதியாகமம் 40:14**

14. இதுதான் அதின் அர்த்தம் என்று சொன்னதும் அன்றி, நீ வாழ்வடைந்திருக்கும்போது, **என்னை நினைத்து,** என்மேல் தயவுவைத்து, என் காரியத்தைப் பார்வோனுக்கு அறிவித்து, இந்த இடத்திலிருந்து என்னை விடுதலையாக்கவேண்டும்.

**லூக்கா 22:19**

19. பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; **என்னை நினைவுகூரும்படி** இதைச் செய்யுங்கள் என்றார்.

### 21. இருவரும் தேவ ஆவியினால் நிரப்பப்பட்டு இருந்தார்கள்.

**ஆதியாகமம் 41:38**

38. அப்பொழுது பார்வோன் தன் ஊழியக்காரரை நோக்கி: **தேவ ஆவியைப் பெற்ற** இந்த மனுஷனைப்போல வேறொருவன் உண்டோ என்றான்.

**அப்போஸ்தலர் 10:38**

38. நசரேயனாகிய **இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்;** தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்.

### 22. இருவரும் தங்கள் வீட்டின் மேல் அதிகாரிகளாய் இருந்தார்கள்.

**ஆதியாகமம் 41:40**

40. நீ என் அரமனைக்கு **அதிகாரியாயிருப்பாய்;** உன் வாக்கின்படியே என் ஜனங்கள் எல்லாரும் அடங்கி நடக்கக்கடவர்கள்; சிங்காசனத்தில் மாத்திரம் உன்னிலும் நான் பெரியவனாய் இருப்பேன் என்றான்.

**எபிரெயர் 3:5-6**

5. சொல்லப்படப்போகிற காரியங்களுக்குச் சாட்சியாக, மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். 6. **கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்**; நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மைபாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், நாமே அவருடைய வீடாயிருப்போம்.

### 23. இருவருக்கும் முழு ஆளுகையின் அதிகாரம் இருந்தது.

**ஆதியாகமம் 41:44**

44. பின்னும் பார்வோன் யோசேப்பை நோக்கி: நான் பார்வோன்; ஆனாலும் எகிப்துதேசத்திலுள்ளவர்களில் **ஒருவனும் உன் உத்தரவில்லாமல்** தன் கையையாவது தன் காலையாவது அசைக்கக் கூடாது என்றான்.

**மத்தேயு 28:18**

18. அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: **வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும்** எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**24. இருவர்களுடைய எதிரிகள் அவர்களுக்கு முன்பாக தலை வணங்கினார்கள்.**

**ஆதியாகமம் 41:43**

43. தன்னுடைய இரண்டாம் இரதத்தின்மேல் அவனை ஏற்றி, **தெண்டனிட்டுப் பணியுங்கள்** என்று அவனுக்கு முன்பாகக் கூறுவித்து, எகிப்துதேசம் முழுமைக்கும் அவனை அதிகாரியாக்கினான்.

**பிலிப்பியர் 2:9-10**

9. ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, 10. இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய **முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும்,**

**25. இருவரும் 30-ஆம் வயதிலே மிகப்பெரிய காரியங்களை (கிரியைகளை) செய்ய தொடங்கினார்கள்.**

**ஆதியாகமம் 41:46**

46. யோசேப்பு எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுக்கு முன்பாக நிற்கும்போது **முப்பது வயதாயிருந்தான்;** யோசேப்பு பார்வோனுடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, எகிப்துதேசம் எங்கும் போய்ச் சுற்றிப்பார்த்தான்.

**லூக்கா 3:23**

23. அப்பொழுது இயேசு ஏறக்குறைய **முப்பது வயதுள்ளவரானார்**. அவர் யோசேப்பின் குமாரனென்று எண்ணப்பட்டார். அந்த யோசேப்பு ஏலியின் குமாரன்;

**26. அவர்கள் இருவருக்கும் கீழ்படியும்படியாக மனிதர்களுக்கு சொல்லப்பட்டது.**

**ஆதியாகமம் 41:55**

55. எகிப்துதேசமெங்கும் பஞ்சம் உண்டானபோது, ஜனங்கள் உணவுக்காகப் பார்வோனை நோக்கி: ஓலமிட்டார்கள்; அதற்குப் பார்வோன்: நீங்கள் யோசேப்பினிடத்துக்குப் போய், அவன் உங்களுக்குச் **சொல்லுகிறபடி செய்யுங்கள்** என்று எகிப்தியர் எல்லாருக்கும் சொன்னான்.

**யோவான் 2:5**

5. அவருடைய தாய் வேலைக்காரரை நோக்கி: அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, **அதின்படி செய்யுங்கள்** என்றாள்.

**27. இருவரும் களஞ்சியங்களை திறந்தார்கள்.**

**ஆதியாகமம் 41:56**

56. தேசமெங்கும் பஞ்சம் உண்டானபடியால், யோசேப்பு **களஞ்சியங்களையெல்லாம் திறந்து**, எகிப்தியருக்கு விற்றான்; பஞ்சம் எகிப்துதேசத்தில் வரவரக் கொடிதாயிற்று.

**லூக்கா 24:32**

32. அப்பொழுது அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி: வழியிலே அவர் நம்முடனே பேசி, **வேதவாக்கியங்களை நமக்கு விளங்கக்காட்டினபொழுது**, நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா என்று சொல்லிக்கொண்டு,

**28. இருவரும் எல்லா தேசத்தாருக்கும் நன்மைகளை வழங்கினார்கள்.**

**ஆதியாகமம் 41:57**

57. சகல தேசங்களிலும் பஞ்சம் கொடிதாயிருந்தபடியால், **சகல தேசத்தார்களும் யோசேப்பினிடத்தில் தானியம் கொள்ளும்படி** எகிப்துக்கு வந்தார்கள்.

**வெளி 5:9-10**

9. தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, **சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து** எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு,
10. எங்கள் தேவனுக்குமுன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டைப் பாடினார்கள்.

**29. இருவரும் மனிதர்கள் யார் என்று நன்கு அறிந்திருந்தார்கள்.**

**ஆதியாகமம் 42:7-8**

7. யோசேப்பு அவர்களைப் பார்த்து, தன் சகோதரர் என்று அறிந்துகொண்டான்; அறிந்தும் அறியாதவன்போலக் கடினமாய் அவர்களோடே பேசி: நீங்கள் எங்கேயிருந்து வந்தீர்கள் என்று கேட்டான்; அதற்கு அவர்கள்: கானான்தேசத்திலிருந்து தானியம் கொள்ள வந்தோம் என்றார்கள்.
8. யோசேப்பு அவர்களை த் தன் சகோதரர் என்று **அறிந்தும், அவர்கள் அவனை அறியவில்லை**.

**யோவான் 2:24-25**

24. அப்படியிருந்தும், **இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால்**, அவர்களை நம்பி
இணங்கவில்லை. 25. மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக்
குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்கவேண்டியதாயிருக்கவில்லை.

**30. இருவரும் தங்கள் சொந்த சகோதரர்களால் அறியப்படவில்லை (அடையாளம் காணப்படவில்லை)**

**ஆதியாகமம் 42:8**

8. யோசேப்பு அவர்களைத் தன் சகோதரர் என்று அறிந்தும், **அவர்கள் அவனை அறியவில்லை.**

**யோவான் 1:10**

10. அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, **உலகமோ அவரை அறியவில்லை.**

**31. இருவரும் அழுதார்கள்.**

**ஆதியாகமம் 45:2**

2. **அவன் சத்தமிட்டு அழுதான்**; அதை எகிப்தியர் கேட்டார்கள், பார்வோனின் வீட்டாரும் கேட்டார்கள்.

**யோவான் 11:35**

35. **இயேசு கண்ணீர் விட்டார்**.

**32. இருவரும் ஜனங்களுடைய எல்லா தேவைகளையும் சந்தித்தார்கள்.**

**ஆதியாகமம் 42:25**

25. பின்பு, அவர்கள் **சாக்குகளைத் தானியத்தால் நிரப்பவும்**, அவர்கள் பணத்தைத் திரும்ப அவனவன் சாக்கிலே போடவும், வழிக்கு வேண்டிய ஆகாரத்தைக் கொடுக்கவும் யோசேப்பு கட்டளையிட்டான்; அப்படியே அவர்களுக்குச் செய்யப்பட்டது.

**பிலிப்பியர் 4:19**

19. என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி **உங்கள் குறைவையெல்லாம்** கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே **நிறைவாக்குவார்.**

**33. இருவரும் தங்களை, தங்கள் சகோதரருக்கு வெளிப்படுத்தினார்கள்.**

**ஆதியாகமம் 45:1**

1.அப்பொழுது யோசேப்பு தன் அருகே நின்ற எல்லாருக்கும் முன்பாகத் தன்னை அடக்கிக்கொண்டிருக்கக்கூடாமல்: யாவரையும் என்னைவிட்டு வெளியே போகப்பண்ணுங்கள் என்று கட்டளையிட்டான். யோசேப்பு தன் சகோதரருக்குத் **தன்னை வெளிப்படுத்துகையில்**, ஒருவரும் அவன் அருகில் நிற்கவில்லை.

**லூக்கா 24:31**

31. அப்பொழுது **அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு, அவரை அறிந்தார்கள்**. உடனே அவர் அவர்களுக்கு மறைந்துபோனார்.

**34. இருவரும் தங்களை, தாங்களவே அறிமுகப்படுத்தினார்கள்.**

**ஆதியாகமம் 45:3**

3. யோசேப்பு தன் சகோதரரைப்பார்த்து: **நான் யோசேப்பு**; என் தகப்பனார் இன்னும் உயிரோடே இருக்கிறாரா என்றான். அவனுடைய சகோதரர் அவனுக்கு முன்பாகக் கலக்கமுற்றிருந்ததினாலே, அவனுக்கு உத்தரம் சொல்லக் கூடாமல் இருந்தார்கள்.

**அப்போஸ்தலர் 9:5**

5. அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்: **நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே;** முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார்.

**35. இருவரும் மனிதர்கள் தங்கள் இடத்தில் வரும்படி அழைத்தார்கள்.**

**ஆதியாகமம் 45:4**

4. அப்பொழுது யோசேப்பு தன் சகோதரரை நோக்கி: **என் கிட்ட வாருங்கள்** என்றான். அவர்கள் கிட்டப்போனார்கள்; அப்பொழுது அவன்: நீங்கள் எகிப்துக்குப் போகிறவர்களிடத்தில் விற்றுப்போட்ட உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நான்தான்.

**மத்தேயு 11:28**

28. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! **நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்**; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

**36. இருவரும் மரித்து விட்டார்கள் என்று நினைத்தபோது அவர்கள் உயிரோடு இருக்கிறவர்களாக கண்டார்கள்.**

**ஆதியாகமம் 45:26**

26. **யோசேப்பு உயிரோடிருக்கிறான்**, அவன் எகிப்துதேசத்துக்கெல்லாம் அதிபதியாயிருக்கிறான் என்று அவனுக்கு அறிவித்தார்கள். அவன் இருதயம் மூர்ச்சை அடைந்தது; அவன் அவர்களை நம்பவில்லை.

**I கொரிந்தியர் 15:3-7**

3. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால்,
கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, 4.
அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி **மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து**, 5.
கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் **தரிசனமானார்.** 6. அதன்பின்பு அவர் ஐந்நூறுபேருக்கு
அதிகமான சகோதரருக்கும் ஒரேவேளையில் **தரிசனமானார்**; அவர்களில் அநேகர்
இந்நாள்வரைக்கும் இருக்கிறார்கள், சிலர் மாத்திரம் நித்திரையடைந்தார்கள். 7. பின்பு
யாக்கோபுக்கும், அதன்பின்பு அப்போஸ்தலரெல்லாருக்கும் **தரிசனமானார்.**

**37. இருவரும் மனிதர்களை கிரயத்திற்கு (விலைக்கு) கொண்டார்கள்.**

**ஆதியாகமம் 47:23**

23. பின்னும் யோசேப்பு ஜனங்களை நோக்கி: இதோ, **இன்று உங்களையும் உங்கள் நிலங்களையும் பார்வோனுக்காக வாங்கிக்கொண்டேன்**; இதோ, உங்களுக்குக் கொடுக்கப்படுகிற விதைத்தானியம்; இதை நிலத்தில் விதையுங்கள்.

**I கொரிந்தியர் 6:20**

20. **கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே;** ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.

**38. இருவரும் ஜனங்களை ஆறுதல்படுத்தினார்கள்.**

**ஆதியாகமம் 50:21**

21. ஆதலால், பயப்படாதிருங்கள்; நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று, **அவர்களுக்கு ஆறுதல் சொல்லி,** அவர்களோடே பட்சமாய்ப் பேசினான்.

**லூக்கா 24:36**

36. இவைகளைக்குறித்து அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில், இயேசு தாமே அவர்கள் நடுவிலே நின்று: **உங்களுக்குச் சமாதானம்** என்றார்.

**39. இருவரும் பயப்படாதிருங்கள் என்று ஜனங்களிடத்தில் சொன்னார்கள்.**

**ஆதியாகமம் 50:21**

21. ஆதலால், **பயப்படாதிருங்கள்;** நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று, அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, அவர்களோடே பட்சமாய்ப் பேசினான்.

**மத்தேயு 28:10**

10. அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: **பயப்படாதிருங்கள்;** நீங்கள் போய், என் சகோதரர் கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள்; அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள் என்றார்.

**40. இருவரும் சகோதரர்களை மன்னித்து அவர்களுக்கு வாக்குத்தத்தம் (வாக்குறுதி) அருளினார்கள்.**

**ஆதியாகமம் 50:15-20**

15. தங்கள் தகப்பன் மரணமடைந்ததை யோசேப்பின் சகோதரர் கண்டு: ஒருவேளை யோசேப்பு நம்மைப் பகைத்து, நாம் அவனுக்குச் செய்த எல்லாப் பொல்லாங்குக்காகவும் நமக்குச் சரிக்குச் சரிகட்டுவான் என்று சொல்லி, யோசேப்பினிடத்தில் ஆள் அனுப்பி,
16. உம்முடைய சகோதரர் உமக்குப் பொல்லாங்கு செய்திருந்தாலும், அவர்கள் செய்த துரோகத்தையும் பாதகத்தையும் நீர் தயவுசெய்து மன்னிக்கவேண்டும் என்று உம்முடைய தகப்பனார் மரணமடையுமுன்னே, உமக்குச் சொல்லும்படி கட்டளையிட்டார்.
17. ஆகையால், உம்முடைய தகப்பனாருடைய தேவனுக்கு ஊழியக்காரராகிய நாங்கள் செய்த துரோகத்தை மன்னிக்கவேண்டும் என்று அவனுக்குச் சொல்லச் சொன்னார்கள். அவர்கள் அதை யோசேப்புக்குச் சொன்னபோது, அவன் அழுதான்.
18. பின்பு, அவனுடைய சகோதரரும் போய், அவனுக்கு முன்பாகத் தாழ விழுந்து: இதோ, நாங்கள் உமக்கு அடிமைகள் என்றார்கள்.
19. யோசேப்பு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நான் தேவனா;
20. **நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்**.

**அப்போஸ்தலர் 3:13-18**

13. ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களுடைய தேவனாகிய நம்முடைய பிதாக்களின் தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை மகிமைப்படுத்தினார்; அவரை நீங்கள் ஒப்புக்கொடுத்தீர்கள்; பிலாத்து அவரை விடுதலையாக்கத் தீர்மானித்தபோது, அவனுக்குமுன்பாக அவரை மறுதலித்தீர்கள்.
14. பரிசுத்தமும் நீதியுமுள்ளவரை நீங்கள் மறுதலித்து, கொலைபாதகனை உங்களுக்காக விடுதலைபண்ணவேண்டுமென்று கேட்டு,
15. ஜீவாதிபதியைக் கொலைசெய்தீர்கள்; அவரை தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்.
16. அவருடைய நாமத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது; அவரால் உண்டாகிய விசுவாசமே உங்களெல்லாருக்கும் முன்பாக, இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது.
17. சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச் செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்.
18. கிறிஸ்து பாடுபடவேண்டுமென்று தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் முன்னறிவித்தவைகளை இவ்விதமாய் நிறைவேற்றினார்.